Press Release No: 413

Date: 3/6/08

செய்திக் குறிப்பு

மீன்துறை தலைமையலுவலகத்தில் 3.6.2008 அன்று நடைபெற்ற ஒரு விழாவில், மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர், திரு கே.பி.பி சாமி அவர்கள், கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள இரு திட்டங்களின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட நிவாரணத் தொகைகளை மீனவர்களுக்கு வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்தார்.

1. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின் பேரில், 30.4.2008 அன்று சட்டமன்ற பேரவையில் அறிவிப்பு செய்தவாறு, 2008ம் ஆண்டுக்கான மீன்பிடி தடைக்காலத்தில் மீனவர்களுக்கு ஏற்படும் இன்னல்களை நீக்கும் முகத்தான், ஒரு கடல் மீனவர் குடும்பத்திற்கு வழங்குவதற்கு ஒப்பளிக்கப்பட்ட ரூ500/– ஐ , சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 85 மீனவர்களுக்கு வழங்கினார். இத்திட்டத்தின் கீழ் 2.00 இலட்சம் கடல் மீனவர் குடும்பங்கள் பயனடைவர். இதற்கென அரசு ரூ.10.08 கோடிக்கு செலவின ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

2. சுனாமியால் பாதிக்கப்பட்டு ஏற்கனவே பயனடைந்த மீனவர்களுக்கு ,இராஜீவ் காந்தி சுனாமி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட நிவாரணப் பொருட்களில், வலைகள் (மால்கள்) வழங்குவதற்கு ஒரு பயனாளிக்கு ஒப்பளிக்கப்பட்ட ரூ10,000/– உதவித் தொகையில் , முதல் தவணையாக ரூ.6000/– ஐ சென்னையைச் சேர்ந்த 5 பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிவாரணத் தொகை 42000 பயனாளிகளுக்கு 44.00 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இரு திட்டங்களின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட உதவி நிவாரணத் தொகை வழங்குதல் அனைத்து கடலோர மாவட்டங்களிலும் துவங்கப்பட்டு விரைவில் முடிக்கப்படும்.

இவ்விழாவில் செல்வி லீனா நாயர், இ.ஆப, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் செயலர், மற்றும் திரு சம்பு கல்லோலிக்கர், இ.ஆப மீன்துறை ஆணையர் கலந்து கொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை 9.